STC.No. 1360–2025
நாள் 17.02.2026
P.W.1 – (சங்கர்)
எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மனுவின் பெயரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் வழக்கறிஞராக 26 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எதிரி என்னிடம் சட்ட ஆலோசனை பெறுவார் என் அலுவலகத்திற்கு அடிக்கடி வருவார். அதனால் பழக்கம். நான் வசிக்கும் வீடு என் சொந்த வீடு ஆகும். நான் இராஜபாளையத்தில் பெடரல் வங்கியில் வீட்டு கடன் வாங்கி வீடு கட்டினேன் என்றால் நான் வீடு கட்டுவதற்காக கடன் வாங்கவில்லை, என் மகன் தொழில் செய்வதற்காக கடன் வாங்கினேன். என் மகன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் தற்சமயம் வேலை பார்க்கவில்லை, அவர் டிப்ளமோ மெக்கானிக் படித்துள்ளார். நான் 2 ஆண்டுகளுக்கு முன் என் மகனுக்கு கடன் வாங்கி கொடுத்தேன். ரூ.5 லட்சம் கடன் வாங்கிக் கொடுத்தேன். என் மகன் மாட்டுப் பண்ணை வைப்பதற்காக கடன் வாங்கி கொடுத்து ஏற்பாடு செய்து கொடுத்தேன். நான் வாங்கிய கடனிற்கு ஆண்டு வட்டி 23% ஆகும். அந்த கடன் தொகையை 72 மாதங்கள் மாத தவணை தொகை ரூ.12,872/– ஆக திருப்பி செலுத்தவேண்டும். ஒரு மாத தவணை செலுத்த வில்லை என்றாலும் தவணை தொகைக்கு கூடுதல் வட்டி செலுத்தவேண்டும் என்றால் ஆம். நான் இது நாள் வரை 27 மாத தவணை செலுத்தி உள்ளேன்.

நான் அவ்வாறு கடன் பெற்றதற்கான ஆவணம் மற்றும் தவணை செலுத்திய ஆவணம் என் கையில் உள்ளது என்றால் சரி. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். நான் 27 தவணை போக ஏனைய மாத தவணை செலுத்த வேண்டியது உள்ளது என்றால் சரி. நான் கடன் வாங்கியது பெடரல் வங்கி அல்ல, நான் கடன் வாங்கியது ஏபிஇஜி பைனான்ஸ் நிறுவனம் ஆகும். நான் அந்த பைனான்ஸ் நிறுவனத்திற்கு கடன் தொகையை செலுத்தவில்லை என அந்த நிறுவனம் என் வீட்டில் சர்பேஷ் சட்டத்தின்படி ஜப்தி நோட்டீஸ் ஒட்டினார்கள் என்றால் சரியல்ல. எதிரியின் அலைபேசி எண் என்னிடம் உள்ளது. நான் அவரிடம் அலைபேசியில் பலமுறை பேசியுள்ளேன் என்றால் சரி. எதிரியின் அலைபேசி எண் என்ன என்றால் எனக்கு மனப்பாடமாக ஞாபகம் இல்லை. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் தந்தையின் பெட்டிக் கடையை பார்த்து வருகிறார். அந்த கடை எதிரியின் சொந்த கடை இல்லை என்றாலும் அவர் அப்பா கடை என்றாலும் சரிதான். எதிரி அவர் அப்பாவிடம் சம்பளத்திற்கு இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. எதிரி வசிக்கும் வீடு வாடகை வீடா, சொந்த வீடா என்று எனக்கு தெரியாது.எதிரியின் பெயரில் சொத்து ஏதும் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. நான் என் மகன் தொழிலுக்காக நிதி நிறுவனத்தில் வட்டிக்கு கடன் பெற்றுள்ள நிலையில் நான் எதிரிக்கு 26.03.2025 அன்று எதிரிக்கு ரூ.7,50,000/– வட்டியில்லா கடனாக பு.சா.2ன் முன்னிலையில் கொடுத்ததாக சொல்வது ஏற்புடையதாக அல்ல என்றால் சரியல்ல.

நான் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் 26.03.2025 அன்று எதிரிக்கு ரூ.7,50,000/– கடன் கொடுத்ததாக சொல்வதற்கு

என்னிடம் நிதி ஆதாரம் இருந்ததாக காட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரூ.20,000/-ற்கு மேல் கடன் கொடுப்பதாக இருந்தால் காசோலை அல்லது வங்கி வரைவோலை மூலமாகதான் கொடுக்கவேண்டும் என்ற விபரம் நான் வழக்கறிஞர் என்பதால் எனக்கு தெரியும் என்றால் அவ்வாறு ஒரு கட்டாயமும் இல்லை. ரூ.2 லட்சத்திற்கு மேல் ரொக்க பரிவர்த்தனை நடைபெற்றால் வருமான வரித்துறைக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கலாம் என்றால் அப்படி ஒன்றும் இல்லை. நான் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்யவில்லை. என் பாண்கார்ட் விபரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் உண்மையில் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்கிறேனா என்ற விபரம் தெரிய வரும் என்றால் ஆம்.

எனக்கு ரூ.7,50,000/- லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானமோ வசதியோ இல்லை என்றாலும் அதனால்தான் நான் என் நிதி ஆதாரம் குறித்து நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை நான்தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன். பு.சா.ஆ.2 செலுத்து சீட்டை நான்தான் பூர்த்தி செய்து வசூலுக்க தாக்கல் செய்தேன். அதில் எழுதப்பட்ட விபரங்கள் அனைத்தையும் நான்தான் எழுதினேன். பு.சா.ஆ.1 காசோலையில் பெயர் மற்றும் தொகை விபரம் நான்தான் எழுதினேன் என்றால் இல்லை. எதிரிதான் எழுதினார். பு.சா.ஆ.1 காசோலையில் எண்ணால் ஏழு ஒரு பேனா மையாலும் ஐம்பதாயிரம் மற்றொரு பேனா மையாலும் எழுதப்பட்டுள்ளது என்றாலும் எண்ணால் ஏழு இடைச்செருகலாக எழுதப்பட்டது என்றாலும் சரியல்ல. ஆக்சிஸ் வங்கியில் காசோலையை ரூ.5 லட்சத்திற்கு மேல் பூர்த்தி செய்ய முடியாது என்றால் சரியல்ல. எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். பு.சா.ஆ.1 காசோலை பு.சா.ஆ.2 செலுத்துசீட்டு ஆகிய இரண்டையும் நான்தான் பூர்த்தி செய்தேன் என்றாம் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும் சரியல்ல.

பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் எதிரி உடையது அல்ல என்றால் சரியல்ல, எதிரி தான் என் முன்பும் சாட்சியின் முன்பும் கையொப்பம் செய்தார். நானும் எதிரியும் கேரளாவில் சட்டவிரோத பழங்கால நாணயம் தொழில் செய்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு செய்த தொழிலின் சம்மந்தமாக நானும் எதிரியும் அலைபேசியில் பேசிக்கொண்ட உரையாடல் பதிவு உள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் அலைபேசியில் பேசியபோது ஐம்பதாயிரம் என்பதில் இடைச்செருகலாக ஏழு சேர்த்து எதிரியிடம் பேசினேன் என்றால் சரியல்ல. காசோலையை ரூ.7,50,000/- என பூர்த்தி செய்ய முடியாது என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியாமலே நான் ரூ.7,50,000/- என பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது என கையெழுத்து நிபுணர் கருத்துரை பெற தயாராக உள்ளீர்களா என்றால் தேவைப்பட்டால் நீங்கள் செய்து கொள்ளுங்கள் எனக்கு ஆட்சேபணை இல்லை.

நான் ரூ.7,50,000/- கடன் கொடுத்ததாக சொல்வதற்கு எதிரியிடம் வேறு ஆவணங்கள் அல்லது சொத்து ஆவணங்கள் கேட்டு பெறவில்லை என்றால் சரி. எதிரி பணத்தை திருப்பி தருவார் என்ற நம்பிக்கை இருந்தது. பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யப்படவில்லை என்றாலும் அந்த அஞ்சலக ஒப்புகை அட்டையில் பாக்கியலட்சுமி என கையொப்பம் உள்ளது என்றாலும் பாக்கியலட்சுமி என்ற கையொப்பம் உள்ளது பாக்கியலட்சுமி எதிரியின் தாயாரா, மனைவியா என்று எனக்கு தெரியாது. பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு எதிரிக்கு சார்பாகததால் எதிரி பதில் அறிவிப்பு

அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு உறவினர் அல்ல என்றாலும் நானும் எதிரியும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. உறவினர் அல்லாத நபருக்கு எவ்வித ஆவணமும் பெறாமல் நான் ரூ.7,50,000/- வட்டியில்லாத கடனாக கொடுத்ததாக சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ரூ.5,000/-, ரூ.10,000/- போன்ற கடன்களை வாங்கி திரும்ப செலுத்தியுள்ளார் அந்த நம்பிக்கையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். எதிரி என்னை 20.03.2025 அன்று சந்தித்து கடன் கேட்டதாக சொல்வதும், நான் எதிரிக்கு 26.03.2025 அன்று ரூ.7,50,000/- கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் பு.சா.ஆ.1 காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பு.சா.2 என்னுடைய கட்சிக்காரர் என்பதால் எனக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளித்தார் என்றால் சரியல்ல. எனக்கு எதிரி சட்டப்படி எந்த தொகையும் செலுத்த அவசியம் இல்லை என்றாலும் அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

17/2/24

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.